

எனது வாழ்க்கையே எனது செய்தி

- மகாத்மா காந்தி

# காந்தீயம்

இருதிங்கள் இதழ்

மலர் - 21 இதழ் - 03 2006, பங்குனி விலை: ரூ 10/=


## மனிதரில் தெய்வம்!

**மனிதரில் தெய்வமாய் வாழ்ந்த**
**மகாத்மா போலிம்**
**மாநிலத்தொருவரில்லையே**
**உலகிடையே**
**(மனி)**

**புனித சத்தியாக்கிரகம் போலக்**
**காலக் கோலமாய்**
**புத்தம் புதுமையாக மெய்த்த**
**வழிகாட்டிய**
**(மனி)**

**கனியுங் கற்பகம் போல**
**காட்டியதை நாட்டிய கல்விமான்**
**கொள்கைமான்**
**கனத்த பெருஞ் சக்திமான்**
**முனிவு சிறிதுமில்லா**
**முரணில் பணிவினோடு**
**முன்னிடுஞ் சுயமதிப்பு**
**நண்ணிட வாழ்ந்த அந்த**
**(மனி)**

**சாதி சமயமென்றும்**
**தாழ்ந்தா ருயர்ந்தா ரென்றும்**
**சாகியத்தைக் கெடுத்த**
**போலியரை எதிர்த்தார்.**
**சோதி சொருபரான**
**சுடரொளியைப் போற்றி**
**சுற்றம் போல னைவரையும்**
**ஒற்றுமையாக்கினார் .**
**(மனி)**


**முதுபெரும் புலவர்**
**கலாபூசஷணம்**
**வை.க.சிற்றம்பலம்**


## மதங்களை கேலிக்குட்படுத்துதல்

சமயங்களையும் அவற்றின் இறை துதர்களையும் கேலிக்குட்படுத்தும் செயல் இன்று உலகின் கவனத்தை வெகுவாக ஈர்த்திருக்கின்றது. எந்த இனத்தினையோ மதத்தினையோ இழிவுபடுத்தும் உரிமை எவருக்கும் இல்லை. மக்களை வழிநடத்தும் சமயங்கள் கேலிக்கிட மாக்கப்படுவது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய தொன்றாகும். கருத்து வெளியிடும் சுதந்திரம் என்று சிலர் வாதாடினாலும் முழு உலகமும் இதை ஒரு குற்றம் என்று கருதுகின்றது.

விளம்பரப் பொருளாக புனிதர்கள் சித்திரிக்கப்படுவதை அகில இலங்கை காந்திசேவா சங்கம் உறுதியாக எதிர்க்கின்றது. இவ்வாறான கீழ்த்தரமாக செயல்கள் மதமோதல்களை உண்டு பண்ணி உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக மாறிவிடக் கூடிய தொன்றென்பதை எமது சங்கம் சுட்டிக்காட்டுகின்றது.

மேற்குலக வர்த்தக நிறுவனங்கள் இந்துக் கடவுளர்களின் உருவப்படங்களை உள்ளாடைகளிலும், பாதணிகளிலும் பொறித்ததன் மூலம் இந்துமத நிறுவனங்களின் எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டி நேர்ந்தது. அண்மையில் இந்தியாவின் பிரபல ஓவியரான எம்.எவ்.ஹுசைன் என்பவர் சரஸ்வதிதேவி, பாரதமாதா உருவங்களை நிர்வாணமாக வரைந்திருந்தார். இந்த ஓவியரைக் கொலை செய்வதற்கு 11.5 மில்லியன் டொலர் சன்மானமாக வழங்கப்படும் என்று இந்திய இந்து தனி நபர் சட்டவாரியம் அறிவித்தது. மேலும் துறவியாகிய புத்தருக்கு நடந்த கதியைப் பாருங்கள். பௌத்த மதத்தை இழிவு செய்யும் நோக்கோடு உலகியல் இன்பங்களை வெறுத்த புத்தரை ஒரு பெண்ணுடன் கேலிச்சித்திரமாகத் தீட்டியிருந்தது, மேற்கு அமெரிக்காவின் நெவாடா மாநிலத்திலுள்ள ஜப்பானிய விடுதியொன்று. பெரும்பாலான ஜப்பானியர்கள் பௌத்தர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆராயுமிடத்து தமது வியாபார தந்திரமாக இதை மேற்கொண்டு இருக்கலாம். ஆன்மீகம் என்பது ஒரு போசனம். சமயப்பற்று என்பது ஓர் இரவு வாழ்க்கை. ('Spiritual Dining - Religious night life') என்ற அர்த்தப்பட இச்சித்திரங்களுக்குக் கீழ் எழுதப்பட்டிருந்தது. தியான புத்தரும், புத்தரைப் போல தியானத்தில் அமர்ந்த நிர்வாணப் பெண்ணும் எவ்வாறு வாடிக்கையாளர்களைக் கவர்கின்றனர் என்பதே எம் முன் னாலுள்ள வினாவாகும்.

**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல் பெண்களின் உடைகளுக்கான விளம்பரத்திற்குப் புத்தர் நீச்சல் உடை அணிய வேண்டிய தேவையும் அமெரிக்காவில் ஏற்பட்டது. அண்மையில் எமது நாட்டில் புத்தளம் மாவட்டம் ஆனமடுவ பிரதேசத்தில் பஸ் நிலையம் அருகில் புத்த பகவானின் உருவத்துடன் கூடிய பெண்களுக்கான சிகையலங்கார பொருட்களை விற்பனை செய்த ஒருவரை பொலிஸார் கைது செய்ததாக செய்தி வெளியாகியிருந்தது.

இந்தப் பின்னணியில் இன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நபிகள் குறித்த கற்பனைச் சித்திரம் தொடர்பான தகவல்களை இங்கு ஆராயமுற்படுகின்றோம். கடந்த (2005) டிசம்பர் மாதம் ஜுலியண்ட் போர்டன்ட் என்ற டென்மார்க் பத்திரிகை முகம்மது நபி(ஸல்) அவர்கள் எனக்கூறி உருவப்படமொன்றை பிரசுரித்திருந்தது. இந்த முகம்மது நபிகள் நாயகத்தின் கற்பனைச் சித்தரத்தைத் தொடர்ந்து இஸ்லாமிய மக்கள் கொதிப்படைந்துள்ளனர். இஸாமிய உலகு எங்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. சில நாடுகளில் டென்மார்க் தூதரக அலுவலகங்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு தீக்கிரையாகும் அளவுக்கு நிலைமை மோசமாகியிருந்தது. பாகிஸ்தானிலும் இந்தோனேசியாவிலும் ஆவேச கோபத்தின் உச்சமாகப் பலர் பலியாகினர். பிரபல இஸ்லாமிய தீவிரவாத இயக்கமான 'ஜமாயா இஸ்லாமியா' டென்மார்க் வாசிகளைத் தாக்கக்கூடும் என்றும் அச்சம் எழுந்தது. பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டக்காரர்கள் முஷாரப் அரசை 'இது ஒரு அமெரிக்க பொம்மை அரசு' என்று சாடியுள்ளனர். ஈரானில் அரசின் ஆதரவுடன் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இஸ்லாமிய நாடுகள் டென்மார்க் பொருட்களை முற்றாக பகஷ்கரித்துள்ளன. கேலிச் சித்திரம் வரைந்த ஐரோப்பிய ஓவியரின் தலையைக் கொய்பவர்களுக்கு 11.5 மில்லியன் டொலர் சன்மானமாக வழங்கப்படும் என்று முஸ்லிம் அரசியல்வாதி ஒருவர் அறிவித்திருந்தார். இதேவேளை, டென்மார்க் பிரதமர் அனஸ் போராஸ்மிலஸ் பி.பி.ஸி.யில் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியிருப்பதாகச் செய்திகள் வெளிவந்தன. கராச்சிக் கடற் பகுதியில் பாகிஸ்தான் மீனவர்கள் வித்தியாசமான முறையில் படகுகளில் பேரணி நடத்தித் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதேவேளை, இலங்கை முஸ்லிம்களும் தமது காத்திரமான பங்களிப்பை இது விடயத்தில் நல்கியுள்ளமை பின்வரும் சம்பவங்களின் மூலம் தெரிய வருகின்றது. பெப்ரவரியில் நீர்கொழும்பு மற்றும் திருகோணமலையில் தொழுகைக்குப் பின்னர் டென்மார்க் நாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டங்களின் வரிசையில் இலங்கை அரசாங்கம் டென்மார்க் நாட்டுக்குத் தனது உத்தியோகபூர்வ எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இறைதூதரை கொச்சைப்படுத்தியிருப்பதைக் கண்டித்து கல்குடா மற்றும் ஓட்டமாவடி முஸ்லிம் சமூகம் வெளியிட்ட அறிக்கை உலகில் ஏற்பட்டுவரும் இன, மத, அரசியல் ஒடுக்கல்களுக்கு எதிரான வெளிப்பாடாக எம்மால் நோக்கப்படுகின்றது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "மீண்டும் ஒருமுறை காலனித்துவத்தின் அடிவருடிகளும் இஸ்லாத்தின் விரிந்த கொள்கைகளுக்கு முகம் கொடுக்க முடியாத முதுகெலும் பற்ற மேற்குத்தேய கோழைகளும் இஸ்லாத்தையும், அதன் உத்தம தூதரையும் சீண்டிவிட்டு மூக்குடைபட்டு நிற்கின்றனர்.

"அல்லா"வின் ஒளியை தமது வாய்களால் ஊதி அணைத்துவிட அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் காபிர்கள் வெறுத்த போதிலும் அவனது ஒளியைப் பூரணப்படுத்தியே தீருவான்" என்றுள்ளது.

மேற்கத்திய நாடுகள் தமது அனைத்து பிரசாரங்களையும் அரசியல் வழிமுறைகளையும் பயன்படுத்தி இஸ்லாமிய எழுச்சியை முறியடிக்க எத்தனித்து வருவதாகவும், மேற்கத்திய சக்திகள் இஸ்லாமிய உலகில் மீண்டும் ஒரு காலனித்துவ யுகத்தை ஏற்படுத்திவிடாமல் முஸ்லிம் நாடுகள் மிக விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் ஈரான் இஸ்லாமிய குடியரசுத் தலைவர் ஆயதுல்லா செய்யத் அலி கோமேனி அண்மையில் வெளியிட்டிருந்த விசேட செய்தியில் தெரிவித்திருக்கிறார். ஏகாதிபத்திய வாதிகளின் நிகழ்ச்சி நிரலில் முதன்மை வகிப்பது இஸ்லாமிய அலைகளைத் தடுத்து நிறுத்தி இஸ்லாமிய பெறுமானங்களுக்கு அணையிடுவதேயாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இச்செய்தி கேலிச்சித்திர விவகாரத்திற்குப் பின்னரான உலக அரங்கில் முக்கியம் பெறுகின்றது.

மனிதனை நல்வழிப்படுத்த தோற்றுவிக்கப்பட்ட மதங்களை கொச்சைப்படுத்துவது அநாகரிகமானது. மதச் சீர்திருத்தம் செய்வோரும் நாகரிக வழியில் அதை மேற்கொள்ள வேண்டும்.

**எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

காந்தி ஆண்டு 138 (2006 பங்குனி)


## இங்கிலிஷ் மூலம் கல்வி படும்பாடு

பேராசிரியர் நேசையா ஆங்கில நூல்கள் எழுதியவர். ஆங்கிலத்தின் மூலம் பிறமொழி, மதங்களில் நன்கு தேர்ச்சியுற்றவர். இவர் 1950 இல் கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில் "பகவத் கீதை" பற்றிப் பேசிய பேச்சில் மயங்கிய ஒரு ஆசிரிய மாணவர் அவர்தம்மீது ஏற்படுத்திய மனப்பதிவைப் பெரிதும் சிலாகித்துப் பேசுவதுண்டு. அவரிடம் கல்வி டிப்ளோமா பயின்ற ஒரு பொருளியல் ஆசிரியர் அவரது தாய்மொழிப் பற்று, பிழையற்ற ஆங்கில அறிவு, காந்தீய சிந்தனை பற்றியெல்லாம் புகழ்வதுண்டு. உலகமயமாதல் என்ற பெயரால் இன்று ஆங்கில மொழி மூலம் கல்வி கற்கவேண்டுமென்பதை வற்புறுத்துவோர் அவரது கருத்துக்களை மீள நினைவுக்குக் கொண்டுவருவது நன்று.

1943 இல் கல்வி ஆணைக்குழு (கன்னங்கரா அறிக்கை) ஒரு நூற்றாண்டு ஆங்கிலக் கல்வியால் இலங்கையில் ஐந்து சதவீதமானோரே ஆங்கில அறிவு பெற்றிருந்தனர் என்றும், ஆக்கத்திறன் விருத்தியடையத் தாய்மொழி மூலம் கற்பதே சிறந்தது என்றும் வலியுறுத்தியது. ஐம்பதுகளி லிருந்து ஆங்கிலப் பாடசாலைகளும் படிப்படியாகத் தாய்மொழி மூலம் கல்வியைப் போதித்தன. உயர் விஞ்ஞானக் கல்விக்கு ஆங்கிலம் கைகொடுத்தது. அதை நாடியவர்கள் வெளிநாடுகளிலும் தம் திறனைக் காட்டமுடிந்தது. அரிவரியிலிருந்து ஆங்கில மூலம் கற்பதும், ஆங்கில அறிவை வளர்ப்பதும் ஒன்றல்ல.

1870 இல் தெல்லிப்பழையில் வண.தாமோதரம் என்பவர் 'யாழ்ப்பாணக் கல்விநிலை" என்ற சிறு ஆங்கில நூலை வெளியிட்டார். வட்டுக் கோட்டை செமிஷனரி வழங்கிய கல்வி சி.வை. தாமோதரம்பிள்ளை, கரல் விஸ்வநாதபிள்ளை, உவைமன் கதிரவேற்பிள்ளை போன்றோரை பேரறிஞர் ஆக்கித்தந்தது. அவர்கள் தலைமுறை மறைய, யாழ்ப்பாணக் கல்லூரிகளில் 8ம் தரம் படித்து அரசாங்க, பெருந்தோட்ட உத்தியோகத்தை நாடி ஓடும் இளைஞரைப் பற்றி கவலையோடு குறிப்பிட்டார் தாமோதரம். மலையகத்தில் ஒரு தோட்ட நிர்வாகியான ஆங்கிலேயர் "What brought you here?" (என்ன முகாமையாக வந்தாய்?) என்று கேட்க "Jaffna train brought here , Sir" என்று விடையளித்த யாழ்ப்பாண இளைஞனைக் குறிப்பிட்டு, உத்தியோக மோகம் பற்றியும் "அரைக் கல்வி முழுமொட்டை" என்ற கிராமப் பழமொழியின் தாற்பரியம் பற்றியும் விளாசியிருக்கின்றார். அரை ஆங்கில அறிவுடன் கச்சேரியில் அரச அதிபரின் மொழி பெயர்ப்பாளராகப் பதவி வகித்த ஒரு தமிழரின் ஆங்கிலமொழி வல்லபத்தைக் கூறும் கதை அக்காலத்தில் பிரபலமானது. அரச அதிபர் மாலை உலாப்போகும் போது நிகழ்ந்ததை அடுத்த நாள் தன் சக உத்தியோகத்தருக்கு வருணித்தாராம். "Mr............'s. is horse came தடல்புடல் and கிளுவையோட Press பண்ணி, நானும் என்ரை வேலைக்கார முனியனும் இல்லாவிட்டால், துரை at the point of death" அதைக்கேட்டு வயிறு புண்ணாயின காலம் ஒன்றிருந்தது. இப்போது அந்தநிலை ஏற்படுமோ என்று ஏங்கும் காலம் வந்துள்ளது. இன்றும் அரசாங்க விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு இந்நிலையில்தான் உள்ளது.

உலக வங்கியின் கல்விக் கோட்பாட்டின்படி மீண்டும் ஆங்கில மூலம் கல்வி என்ற மாயை வலை விரிக்கிறது. பேரறிஞர் சிவசேகரம் இதன் மடமையை வெளிப்படுத்தியிருக்கின்றார். யாழ்ப்பாணத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் படிப்பிக்கும் ஆங்கில பாடக் கொப்பிகளைப் பார்வையிட்டால் பயங்கரமான ஆங்கிலக் கொலையைக் காண முடியும். சமூகக்கல்வி ஆங்கில மூல வினாக்களின் வடிவமைப்பு அறுபது ஆண்டுகள் ஆங்கிலத்தைப் படித்தவருக்கும் புதிராக இருக்கிறது. அதைத் திருத்தினால் ஆசிரியர் மாணவர் மீது கோபிப்பார். திருத்தாவிட்டால் மாணவரின் பெற்றோர் துக்கிப்பர். கொழும்பு பெரிய கல்லூரி ஒன்றில் ஆசிரியை சொல்லிவிட்டாராம்.: "சமூகக்கல்வியைப் படிப்பிப்பேன். அதில் ஆங்கிலப் பிழைகள் இருந்தால் என்னைக் கேளாதீர்கள்"

150 ஆண்டு விழாக் கொண்டாடிய ஒரு பாடசாலையில் வவுனியா கல்வியியற் கல்லூரியில் இருந்து வெளியேறி முதல் ஆசிரியப் பதவி ஏற்ற பட்டதாரி 7 ஆம் தரத்துக் கரும்பலகையில் எழுதிய வாசகங்கள் பலவற்றுள் இரண்டு இவை (1) "He was go to his house". (2) "I was read ............" வடமொழியில் நிகழ்கால வினைமுற்றுடன் "ஸ்ம்" என்று சேர்த்தால் இறந்த காலம் காட்டும். இறந்தகால வடிவங்களைப் பாடமாக்காத மாணவன் இப்படி எழுதினால் ஆசிரியர் ஏசுவார். இந்த இளம் ஆங்கில ஆசிரியை ஆங்கில நிகழ்கால வினைக்கு முன் was சேர்த்தால் அது இறந்தகாலம் ஆகும் என்று நினைத்தார் போலும்.

(7 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஜனநாயகத்துக்கான இந்தியத் தேடல்"

## விமலா தக்கர்

**ஜனநாயகம் வானகத்திலிருந்து வையகத்துக்கு அருள் மழையாய்ப் பொழிந்த வரப்பிரசாதம் என்று கடந்த ஒன்றரை நூற்றாண்டு காலம், எமக்கு மேனாட்டுக் கல்வி மூலம் ஊட்டப்பட்டது. நாமும் அதனை மந்திரம் போல ஏற்றுக்கொண்டோம். "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்"என்ற தாரக மந்திரங்களையும், சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை என்ற உப வாசகங்களையும் மனனம் செய்து பேசியும் எழுதியும் வந்தோம். கட்சிமுறை அரசியல், பிரதிநிதித்துவ அரசாங்கம் என்றெல்லாம் பழைய நிலப்பிரபுத்துவ சார்வாதிகாரக் கோனாட்சிக்கு எதிராக, விரும்பி அடையத்தக்க குறிக்கோளாக, முன்வைத்தனர் எம் தாராண்மை வாதக் கல்வியாளர்கள். மேனாட்டுக் குடியேற்ற வாதத்திலிருந்து விடுபட்ட மூன்றாம் உலகநாடுகள் பலவற்றில் ஜனநாயகம் தோல்விகண்டது. அவற்றுள் ஓரளவு முன்னேறிய இந்தியாவில், கடந்த முப்பது ஆண்டுகளாக உண்மை ஜனநாயகத்துக்கான தேடுதல் பலவிதமாக நிகழ்த்தப்பட்டு வந்தது. கட்சியை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயக அரசியல் முறை தனது இயங்கியல் தன்மையை இழந்துவிட்டது. ஆசிய நாடுகள் ஜனநாயக சமுதாயத்தைப் புதிய தளத்தில் புதிய கட்டமைப்பு வடிவத்தில் ஆக்கவேண்டிய கடமைப்பாடு உடையன. இது காலத்தின் கட்டாயம்.**

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் "நேசமுள்ள இந்தியர்களே தயைகூர்ந்து ஆழ்ந்து சிந்தியுங்கள்" என்ற தலைப்பில் அனைவரும் படிக்க வேண்டும் என்ற பெருவிருப்புடன் ஒரு விண்ணப்பத்தை விடுத்துள்ளார். அதில் வரும் சில கருத்துக்கள்:

நாம் விடுதலையை மதிக்கின்றோம். நாம் அகத்தே விடுதலை பெறும் குறிக்கோள் உடையவர்கள். அதுபோலவே பிறரது விடுதலையையும் மதிக்க வேண்டும். எமது சுதந்திரத்தைப் பொன்னைப் போல் போற்றிப் பாது காத்து வளர்க்க வேண்டும். நாம் சுதந்திரத்தைக் கைவிட்டோமானால், யாரும் எம்மை மதிக்க மாட்டார்கள்.

***அபிவிருத்தி அடுத்த குறிக்கோள்:***

ஐம்பது ஆண்டுகளாக அபிவிருத்தியடைந்து வரும் நாடாக இருக்கிறோம். எமது வறுமை மட்டம் குறைந்து வருகிறது. எமது சாதனை உலகளாவிய ரீதியில் மதிக்கப்படுகிறது. ஆனால் நாம் பழைய தாழ்வு மனப்பான்மையைக் கைவிடவில்லை. மேலோர் மதிக்கும் சமூக, தனி மனிதப் பண்புகளை அபிவிருத்தியடையச் செய்யவில்லை.

மூன்றாவது நோக்கு பலம்: இராணுவ பலம் பலமல்ல. முக்கியமாகப் பொருளாதார பலம் அவசியம். விண்வெளி ஆய்வு அணுசக்தி ஆய்வு என்ற துறைகளில் முப்பெரும் அறிஞர்களுடன் இணைத்து பணியாற்றிய காலத்தை நான் பெரிதும் போற்றுகின்றேன். அக்காலத்தே எமது இந்தியா பலம் பெற்றது. பிறரில் தங்கியிராமல் சுதந்திரமாக அறிவை வளர்த்தது. ஒரு மருத்துவமனையில் ஊனமுற்ற சிறார் 3 கிலோ பாரமான உலோக கால்தாங்கிகளைச் சுமந்து உலாவினர். மருத்துவர் வேண்டுகோள்படி, 300 கிராம் கால் தாங்கிகளை மூன்று வாரத்தில் செய்து முடித்துக் கொடுத்தோம். அவர்களது பெற்றோரின் நன்றிக் கண்ணீர் எம்மை மகிழ்வித்தது.

எமது பத்திரிகைகள் எமது பலத்தைத் தாழ்வாக மதித்தும், குறைபாடுகளை மிகைப்படுத்தியும் மலிவுப் பிரசாரம் செய்கின்றன. எத்தனையோ விடயங்களில் நாம் உலக நாடுகளில் முதல், இரண்டாம் இடங்களை வகிக்கிறோம். ஆனால் அவை எமது பலவீனங்களையே விளம்பரப்படுத்துகின்றன. ஒருமுறை இஸ்ரேலில் நின்றபோது, தாக்குதல்கள், மரணங்கள் நிகழ்ந்த நாளில், அங்குள்ள நாளிதழ் முதலாம் பக்கத்தில் ஒரு யூத கனவானின் படமும், அவர் ஐந்து ஆண்டில் ஒரு பாலை நிலத்தைப் பழச் சோலை வனமாக்கிய செய்தியும் வெளிவந்தன. இப்படியான ஊக்க மூட்டும் செய்திகள் மற்றவர்களையும் விழிப்படைய, உழைக்கச் செய்யும். சோக, பயங்கரச் செய்திகள் பின் பக்கங்களில் புதைந்து கிடந்தன. எம் பத்திரிகைகளோ எப்போதும் எதிர்மறை நோக்கை வளர்க்கின்றன. அந்நிய மோகம் தலைவிரித்தாடுகிறது. அந்நிய உடுபுடவை, அந்நிய நுகர்பொருட்கள், அந்நிய தொழில்நுட்பம், அந்நிய கலாசாரம்தான் எமக்கு அவசியம் என்று தோன்றுகின்றது.

ஒரு கூட்டத்தில் என்னிடம் கையெழுத்துக் கேட்ட ஒரு 14 வயதுச் சிறுமியிடம் கேட்டேன்: "உமது குறிக்கோள் என்ன?" என்று. பதில்: "நான் அபிவிருத்தியடைந்த இந்தியாவில் வாழ விரும்புகின்றேன்" அப்படியான வருங்கால சந்ததிகளுக்கு, அபிவிருத்தியடைந்த நாட்டை நாம் ஆக்கிக் கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது குறைகளை உடனே திருத்த முழுமூச்சுடன் செயற்பட வேண்டும். சிங்கப்பூரில் 'சிகரெட்' துண்டை வீதியில் போடமாட்டார்கள். டுபாயில் ரம்ழானின் போது, பலரறியப் புசிக்க முடியுமா? ஜெடாவில் தலையை மூடாமல் வெளியே உலாவலாமா? லண்டனில் தொலைபேசி அலுவலரிடம் "எனது போன் பில்களை மாறி வேறு ஒருவரிடம் அறிவிடு" என்று கைக்கூலி கொடுக்க முடியுமா? வாஷிங்கடனில் 55 மைல் வேகத்தில் கார் ஓட்டிவிட்டு பொலீசிடம் "நான் யாருடைய பிள்ளை என்று தெரியுமா? இந்தா 2 டொலரை எடுத்துப்போ" என்று சொல்ல முடியுமா? குதிரை ஓடி பரீட்சை பாஸ் செய்வது, கள்ள பரீட்சைப் பெறுபேறு படைப்பது. எத்தனை வெட்கக்கேடான காரியங்கள் எங்கள் நாட்டில் நடக்கின்றன. தன்மானம் சிறிதுமில்லாமல் நடக்கிறோம்.

நாம் தேர்தலில் வாக்களித்துவிட்டு, அனைத்தையும் அரசு செய்ய வேண்டுமென்று கைகட்டி நிற்கின்றோம். இடைவிடாது விமர்சிக்கின்றோம். நாம் நற்குடிகள் என்ற முறையில் செய்ய வேண்டியவற்றை உதாசீனம் செய்கின்றோம். சீதனம், பெண்ணடிமை, சிறுவர் துஷ்பிரயோகம் என்று முழக்குவோம். வீட்டில் அவற்றை எல்லாம் நடத்துவோம். கேட்டால் முழு சமூக அமைப்பும் மாறவேண்டும். நாம் தனியே மாறமுடியுமா? என்போம். மகனுக்கு விவாகம் என்றால் சீதனம் கேட்போம். மகளுக்குச் சீதனம் போதாது என்று மாப்பிள்ளை வீட்டார் விலகினால் ஏசித் திரிவோம். சமூகம் என்பது யார்? எம் அயலவர், பிற சமூகம், சிறுகுழுக்கள், அரசாங்கம்! நாம் அல்ல. நாம் திருந்த மனம் இன்றி, பிறரில் பழியைப் போடுகின்றோம். பணம் தேடி உலகு எங்கும் திரிவோம். ஓரிடத்தில் கலகம் ஏற்பட்டால் அரசாங்கம் எங்களை ஊருக்குக் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டுமென்று கூப்பாடு போடுவோம். நாம் எம் மனச்சாட்சியை பணத்துக்கு அடகு வைத்துவிட்டோம்.

இக்கட்டுரை நீண்டதாயும், இருதயத்தைக் குத்துவதாயும் அமைந்துள்ளது. ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும் என்பதையே நான் நோக்கமாகக் கொண்டு இதனைச் சிந்தித்து எழுதினேன். கென்னடி அமெரிக்கருக்குக் கூறிய அறிவுரையுடன் இதனை முடிக்கின்றேன். "நான் என் நாட்டுக்கு என்ன செய்துள்ளேன் என்று வினாவுங்கள். என் நாடு எனக்கு என்ன செய்யப்போகின்றது என்று வினாவாதீர்கள்'' இன்று அமெரிக்காவும் ஏனைய மேற்குல நாடுகளும் எப்படியிருக்கின்றன? அப்படி நம் நாடும் வர நாம் செய்யவேண்டியவற்றைச் செய்வோம்.

ஜனாதிபதி அப்துல் கலாம் இக்கருத்துக்கள் பரவ வேண்டும் என்ற ஆவல் உடையவர் என்ற குறிப்புடன் இதனை விமலா தக்கர் "ஜனநாயகத்துக்காக ஓர் இந்திய தேடுதல்" என்ற தலைப்பிட்ட தொகுப்பு நூலில் வெளியிட்டுள்ளார். நாம் உரிமை பற்றிப் பேசுவோம். கடமையை மறந்துவிடுகிறோம். கடமைக்கு முதலிடம் கொடுத்தால் மட்டுமே ஜனநாயகம் தழைக்கும். தலைவர்களைத் தட்டிக் கேட்கலாம். அல்லது அரசியல்வாதிகள் நம் தோளின் மீது ஏறிச் சவாரி செய்து சுகம் பெறுவர். நாம் சுமைதாங்கிகளாகவே, கழுதைகளாகவே கணிக்கப்படுவோம்.

☆

## ஒரே கோட்டின் புள்ளிகள்

பிளாஸ்ரிக் பைகள் செய்யும் தொழிற்சாலையில் வேலை செய்ய ஆட்கள் தேவை என்று கொழும்புப் பத்திரிகையில் கொட்டை எழுத்தில் விளம்பரம் வந்துள்ளது.

பிளாஸ்ரிக்தான் சூழல் மாசடைவதற்கு முதல் குற்றவாளி என்று உலகம் முழுவதும் ஓலம் இடுகின்றனர். நம் நாட்டிலும் குப்பைகளை அழித்தல் நகர சுத்தி முதலிய செயற்பாடுகளுக்கு பலகோடி செலவிடப்படுகின்றது. பிளாஸ்ரிக் உபயோகம் தடைசெய்யப்பட்டுள்ளது என அறிவித்தல்கள் வருகின்றன. ஆனால் செயலளவில் ஏதுமே இல்லை. இப்போ கடைக்காரன் பணம் கேட்காமல் பிளாஸ்ரிக் பைகளில் பொருட்களைத் தருகின்றான் என்று மகிழ்கின்றோம். அவன் பெறும் இலாபத்தில் பிளாஸ்ரிக் பையின் விலை அற்பமே. குடிசனங்கள் கையை ஆட்டிக்கொண்டு கடைக்குப் போகாமல் ஒரு ஓலைப்பை கொண்டு போனால் என்ன? உமல், புல்லு 'பாக்' கொண்டு போவது வெட்கம் என்ற நிலை வந்துவிட்டது. அக் கைத்தொழில் செய்வோர் பட்டினியில் வாடுகின்றனர். பிளாஸ்ரிக் தொழிலதிபர் கோடி குவிக்கின்றார். எமது பரோபகாரம், சூழல் பாதுகாப்புக் கடமை எங்கே போய்விட்டது? கடமையைக் கருதோம். உரிமை பற்றிக் குரல் கொடுக்கின்றோம். இரண்டும் ஒரே கோட்டின் புள்ளிகள் என்பதை மறந்துவிடுகின்றோம். பலன் பேரழிவுதான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பம் யாருக்கு....?

## என்.மார்க்கண்டனின் கட்டுரையைத் தழுவியது.
## (முன்னை நாள் துணைவேந்தர்,காந்திகிராம பல்கலைக்கழகம்)

ஒரு நாட்டின் சனத்தொகை சிறிதாயிருக்கும் போது விவசாயம், கைத்தொழில்கள் இயந்திரமயமாக்கப்பட்டால் தொழில்நுட்பத் திறமையுடையோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். உலகின் செல்வந்த நாடுகள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி, பெருமளவு உற்பத்தி செய்து, அவற்றை அபிவிருத்தி குன்றிய நாடுகளின் தலையில் கட்டி விடுவதால், இங்குள்ள கமக்காரரின் வாழ்வைப் பாழ்படுத்தி விடுகின்றனர். அங்குள்ள செல்வ கமக்காரருக்கு அரசாங்கம் பெரும் தொகை மானியம் வழங்குகின்றது.வறிய நாடுகளில் ஏழைக் கமக்காரருக்குத் தம் செயற்கை உரம்,கிருமிநாசினி போன்றவற்றை பழக்கும் வரை மானியம் கொடுக்கத் தூண்டியது. பின் அதை நிறுத்தும் படி கட்டளை இடுகிறது. அந் நாடுகளிடம் கடன் வாங்கும் வறிய நாட்டு அரசாங்கங்கள் அக்கட்டளையை நிறைவேற்றுகின்றன.கமக்காரர் புதிய முறைகளை விட வேறு மாற்று வழி இல்லை என நம்பி கூடிய விலை கொடுத்து அவற்றை வாங்கி நட்டப்படுகின்றனர்.விவசாயத்தையே கைவிடுகின்றனர்.

(1960களில் இங்கிலாந்தில் "இரு பண்பாடுகள்" என்ற சொற்பிரயோகமும் அதனை ஒட்டிய விவாதமும் பல மாதங்களாக நிகழ்ந்தன.விஞ்ஞானமே உலகில் பசி பட்டினியை அகற்றி மக்கள் வாழ்வை ஒளிமயமாக்கும் என்றும், கலை,இலக்கியம்,மெய்யியல் போன்றவை சமூகப் பயன்பாடு குறைந்தவை என்றும் பேசப்பட்டது. விஞ்ஞானப் பண்பாட்டை வளர்ப்பதன் அவசியத்தை சி.பி.ஸ்நோ (அரசின் கல்வி, விஞ்ஞானச் செயலர்) வற்புறுத்தினார். வளர்முக நாடுகளில் விஞ்ஞானத்துக்கு புது 'மவுசு' ஏற்பட்டதால், கலைப்பாடங்கள் புறந்தள்ளப்பட்டன.)

ஆனால் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் நாட்டின் சகல மனிதக் குழுக்களையும் உயர்த்தும் அடித்தளத்தை இடவில்லை. சிறு கமக்காரர், சுதேச கைத்தொழில்களில் ஈடுபடுவோர், மீனவர்கள், பின்தங்கிய இனத்தவர்களின் வாழ்வில் விசேட மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. மறுதலையாக அவர்தம் வாழ்வு சுக்குநூறாக உடைந்து போயிற்று.கணனியுகம் பல படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைத் தருகிறது என்பது உண்மை தான். ஆனால் அது ஒரு வீதத்துக்கும்குறைந்தவர்களுக்கே பயனளிக்கிறது.(நம் நாட்டில் பெருகிவரும் கணனி, தகவல் தொழில்நுட்ப கல்விக் கூடங்களையும் அங்கு மூன்று, ஆறுமாத வகுப்புக்களில் அமர்ந்து இருந்துவிட்டு பெற்றுச் செல்லும் சான்றிதழ்களையும் நோக்கினால் தெரியும். அந்தப் பட்டாளத்தில் ஒரு சதவீதம் கூட தொழில் நிலையங்களில் வெற்றிகரமாக செயலாற்றுவரோ என்பது கேள்விக் குறியே) இத் தொழில்நுட்பங்கள் சாதாரண மக்களின் வாழ்வை உயர்த்துவதற்கு பயன்படுகின்றனவா?

சிறு கைத்தொழில் வளர்ச்சிக்குரிய புது முயற்சிகள் ஏராளமாக மேற்கொள்ளப்பட வேண்டும். பொருத்தமான தொழில்நுட்பம் (appropriate technology) என்ற துறையில் கூட மேற்குலக நாடுகளின் நூல்களே நமக்குக் கிடைக்கின்றன. எம் நாட்டிலும் ஆய்வு நிபுணர்கள் அரச உயர் பதவிகளில் இருக்கிறார்கள்.அவர்கள் என்ன செய்தாலும், கீழ்த்தள மக்களை அவை சென்று அடையவில்லை என்பதே உண்மை. சிறு கைத்தொழில் வளர்ச்சியில் தான் சாதாரண மக்களிடையே காட்டுத் தீயாய்ப் பரவும் வேலையில் திண்டாட்டம் குறையும் சூழல் பாழாதலும் குறையும்.

இயற்கை எமது தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதிய வளத்தை வைத்திருக்கிறது. ஆனால் எமது பேராசைச் சுரண்டலுக்குத் தாக்குப்பிடிக்க அதனால் முடியாது. இயற்கையைப் பாழ்படுத்தினால் இயற்கை தன் வழியில் எம்மைத் தண்டிக்கும். உலகப் பொருளாதாரக் கருத் தரங்கு அரசாங்கங்கள் உலகம் வெப்பமாதலையும் சூழல் மாசடைதலையும் தடுக்க ஏதும் செய்யவில்லை எனக் கடுமையாக விமர்சித்துள்ளது. நம் பிரதேசத்தில் மோட்டார் வாகனங்கள் பல்கிப் பெருகி, எரிபொருட் புகையால் துன்பம் ஏற்படுவதை யாரும் சிந்திப்பாரில்லை. உழைக்காதவர்கள், ஆடம்பரப் பொருளாக மோட்டார் ஊர்திகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பொருளாதார,சூழற் பிரச்சினைகள் பற்றி எவருக்கு அக்கறை உண்டு? வியாபாரி சாமான் விற்று, கடதாசிப் பணம் தேடினால் போதும் என் நினைக்கிறான். அரசு வரி கிடைத்தால் சரி என்று நினைக்கிறது. அதிக வாகனம் இருந்தால் அதிக நுகர் பொருள் விற்றால் நாடு செல்வத்தால் கொழிக்கிறது என்று பொருளியல் அறிவு இல்லாத பாமரன் நினைக்கின்றான்.

உலகம் முழுவதும் கல்வியின் அடித்தளம் மாற வேண்டும். படித்தவர்கள் சரியான உளப் போக்கு, ஒழுக்கம்,திறமை,அறிவு பெற்றவர்களாதல் வேண்டும். வயிறு வளர்க்க, பணம் சம்பாதிக்க,ஆடம்பரமாக வாழ மட்டுமே கல்வி என்ற போக்குத் தடுத்து நிறுத்தப் படவேண்டும். படித்தவன் தன்மனப் போக்குக்கு சுய திருப்திக்கேற்ப தொழில் வாய்ப்பைத் தேர்ந்தெடுக்க வசதி கிடைக்க வேண்டும். உழைப்பவர்களின் தேவைக்கும், திறமைக்கும் ஏற்ற சம்பளம் பெற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் வேலையற்ற பட்டதாரிகளின் கிளர்ச்சிக்கு முகம் கொடுக்கப் பயந்து, ஏதோ ஒரு வேலையில் அமர்த்திவிட்டுத் தன் கடமை முடிந்தது என்றிருக்கக் கூடாது. (உளவள ஆலோசகராகப் பல ஆண்டு பணிசெய்து, சமூகத்துக்குப் பயனுள்ள பணிசெய்த வரை, கூலித்தொழிலாளி என்ற வரிசையில் அரச சேவையில் அமர்த்துவது அநியாயத்தில் அநியாயம்) இந்நாட்டில், இந்த இனத்துக்குத்தான் இப்படி ஒரு அநியாயத்தைச் செய்ய முடியும்)

ஆடம்பர வாழ்வுதான் நாகரிக மனிதனின் முன்னேற்றத்திற்கு அளவு கோல் என்ற பிழையான எண்ணம் நம் நாடுகளில் பரவி வருகிறது. சுகாதாரமற்ற குடிசையில் வாழ்ந்து கொண்டும், உயர் மட்டத்தினரின் நடை உடை பாவனைகளைக் கைக் கொள்ளும் பைத்தியக்காரப் போக்கு எங்கும் பரவி வருகிறது. விளம்பர மாயை மக்களைப் பேய் பிடித்தவர்கள் போல நடக்கத் தூண்டுகிறது. தம் சுவாத்தியத்திற்கேற்ற உடை, உணவுப் பழக்கங்கள் மறைந்து வருகின்றன. அயல் வீட்டில் பால் வாங்க வசதியிருந்தும்நியூசிலாந்து கடதாசிப் பெட்டிப் பால்வாங்குவது சிறந்தது என்ற கருத்து கற்றோர், கல்லாதோர் எல்லோரிடத்தும் பரவி வருகிறது. 'நெஸ்பிறே' வானில் ஒலிபெருக்கி ஒவ்வொரு பெட்டிக்கும் பரிசுப் பொருள் உண்டு என்று அறிவித்ததும், மக்கள் மொய்த்து, வீதியை அடைத்து வாங்குகின்றனர்.

வங்கிகள் முதல் சகல வணிக நிறுவனங்களும் பரிசுத்திட்டங் களை அறிவித்து மக்களின் பொருட் பைத்தியத்தை வளர்க்கின்றன. தான் பாடுபட்டு உழைத்த பணமே புசிக்கத்தக்கது என்ற எண்ணமே அற்றுப் போகின்றது. அதனால் அரசியல்வாதிகள், உத்தியோகத்தர் முதல் சகலரும் நீதியல்லாத வழிகளில் பணம் பெற ஆசைப்படுகின்றனர். மூன்றாம் உலக நாடுகளின் முன்னேற்றத்துக்கு, அங்கு நிலவும் ஊழல்களே முதல் தடை என உலகெங்கும் பேசப்படுகிறது பேசும் 'நல்ல மனிதர்' இங்குள்ள அரசியல் வாதிகள், உத்தியோகத்தருக்கு கையூட்டுக் கொடுக்க மறப்பதில்லை. அது அவர்களது வியாபாரப் பண்பாடு.

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு சின்னச் சின்ன உபகாரங்கள் செய்கிறோம் என்று அரச நிறுவனங்கள் இலட்சக் கணக்கில் செலவிட்டு நிற நிறமான விளம்பரங்கள் செய்கின்றன. பத்திரிகை முதலாளியின் பணப்பை நிரம்பும் பாதிக்கப்பட்டவனின் வயிறு வாடும். "அரைக்கொத்தரிசி அன்னதானம்" விடிய விடிய மேள தாளம் என்ற கதைதான்.

☆

---

## இங்கிலீஸ் கல்வி....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பப்புவா நியூகினியாவில் பழங்குடிமக்கள் கிறிஸ்தவர்களாகி ஆங்கிலக்கல்வி பெற்றும், அரைவாசி தமது அபிவிருத்தியடையாத தாய் மொழியையும் அரைவாசி ஆங்கிலத்தையும் சேர்த்து எழுதி, பேசி வருகின்றார்கள். அதை Pidgin English என்கின்றார்கள். முன்னர் சீனரும் ஆங்கிலேயரும் வியாபாரம் செய்வதற்குத் தேவையான கலப்பு மொழியே இப்பெயரால் அழைக்கப்பட்டது. உலக மயமாதலின் வியாபாரத் தேவைகளுக்கு அப்படியான ஆங்கிலம் போதுமென்று வளர்ந்த "பெரிய நாடுகள்" நினைத்தால் சரி. "உண்டிருந்து வாழ" நம்மவருக்கும் அதுபோதும். மனிதன் மனிதப் பண்புடன் வாழ, மேலான உயர்பண்புகளை வளர்க்க அதுபோதுமா? வெறும் கணினிக் கல்விக்குக்கூட அது போதுமா? என்பதே கேள்வி. சுவர் மணிக்கூட்டின் ஊசலில். 1945 இல் தொடங்கிய ஒரு திசை அசைவு எல்லையைக் கண்டு, மீள அடுத்த திசைக்குத் திரும்புகிறது. (1956 க்கு மீளப் போகிறோம் என்று பெருமை பேசும் அரசாங்கத்தின் கீழ் பிட்ஜின் இங்கிலிஷ் வளர்கின்றது. மொழி விடயத்தில் நாம் 1956க்குப் போக மாட்டோம்! என்ன எதிரும் புதிரும்)

"அனைவருக்கும் கல்வி", "கல்வி சிறுவர்களின் பிறப்புரிமை" என்று கோஷமிடுபவர்கள் இந்தக் கல்விப் படுகொலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்நாடு அரைவேக்காட்டு எழுத்தறிவற்றோர் தொகை மிகுந்து வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்ந்து, நிவாரணத்தால் வயிற்றைக் கழுவி நாட்டின் பொது அபிவிருத்திக்கு ஏதும் பங்களிக்காது செம்மறிகளாய் வாழ வைப்பதிலேதான் உலகமயமாதல் நாயகர்களுக்கு விருப்பம். மூன்று ரூபா உள்ளூர் கொப்பி வாங்க வழியில்லாமல் பள்ளி செல்ல முடியாதிருந்த மாணவர்களை 20 ரூபாவுக்கு இறக்குமதி செய்த (அழகிய அட்டை) கொப்பிகளை வாங்கும்படி வற்புறுத்தும் இலவசக்கல்வி வாழ்க. 10, 15 ரூபாவுக்கு வாரம் இரண்டு 'போல்ப் பொயின்ற்' பேனா வாங்கிப் படிக்கவும் வசதியற்ற மாணவர்களுக்கு கணினி வழங்கி நாகரிகமடையச் செய்யும் கல்வித் திட்ட நிபுணர்கள் வாழ்க!. அவர்கள் இப்படியான முற்போக்குத் திட்டங்களை ஊக்குவிப்புச் செய்து, (யாரோ வகுத்தவற்றை இந்த வறிய நாட்டுக்குச் சிபாரிசு செய்து) ஓய்வு பெற்றதும், எம்மை வறுமைப் பாதையிலிருந்து கரையேற்றி மேற்புல நகரக் கலாசாரத்துக்கு இட்டுச் செல்ல என்று தம் நாட்டைவிட்டு வந்து நற்பணிபுரியும் அரசசார்பற்ற அமைப்புக்களில் ஐந்து, ஆறு இலட்சம் சம்பளங்களில் மீண்டும் பதவி வகிக்கும் பேறு கிடைக்கும் தானே? "பாணுக்கு வழியில்லையா?" "ஏன் கேக் சாப்பிடலாமே!" என்ற பிரஞ்சு ராணியின் குரல்தான் கேட்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## காந்திய சிந்தனை
## காந்திய நெறி

அகில இலங்கை காந்திசேவா சங்கம் காந்திய கல்வியைப் போதிப்ப தற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. முதற்கட்டமாக **'காந்திய சிந்தனை அடிப்படைக் கற்கை நெறி'** நடாத்தப்படவுள்ளது. மூன்று மாத காலத்தைக்கொண்ட இக்கற்கைநெறி யில் கணனியும் ஆங்கில மொழியும் உள் ளடக்கப்படவுள்ளன. தொண்டு நிறு வனங்கள் மற்றும் சமூக சேவை அமைப்புக்களில் இணைந்து பணியாற்ற விரும்புபவர்களுக்கு ஏற்றவகையில் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கற்கை நெறியைத் திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்யும் பயிற்சி யாளர்களுக்கு முடிவில் சான்றிதழும் வழங்கப்படும். மேற்படி கற்கைநெறிக்கு இதுவரை பல விண்ணப்பங்கள் வந்து சேர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கற்கைநெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலும் விண ணப்பங்கள் வர வேற்கப்படுகின்றன.

## காந்தி நூலகம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் 'காந்தி நுலகம்' இல 171, 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்க ஆரம்பித்துள்ளது. காந்திய அபிமானிகள், ஆராய்ச்சியாளர்கள், பல்கலை, பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் யாவரும் வந்து பயன்பெற முடியும். நூலகம் பிரதி சனிக்கிழமைகளில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 6 மணி வரையும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் 11 மணிவரையும் திறந்திருக்கும்.

## வெளிவந்து விட்டது...
## நீங்கள்
## படித்துவிட்டீர்களா...?




அகில இலங்கை காந்திசேவா சங்கத் தின் சிறந்த வெளியீடாக சத்திய விஞ்ஞானம் வெளிவந்துள்ளது.

1968-1978 வரையான காலப்பகுதியினுள் காந்தீயம் பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கங்களின் தொகுப்பாக வெளிவந்தி ருக்கும் இந்த நூல் காந்தீய நோக்கில் உலக விவகாரங்களை ஆராய் கின்றது.

**புலவர் பாண்டியனார்,**
**இ.இரத்தினம்**

ஆகிய சிறந்த கல்விமான் கள் தமது நுண்மாண் நுழைபுலம் கொண்டு துருவித் துருவி ஆராய்ந்து சாறு பிழிந ்தெடுத்த கருத்துக்கள் சத்திய விஞ்ஞானம் நூலுரு வில் மக்கள் முன்வைக்கப்படுகின்றன.

மாணவர்களும் பொதுமக்களும் நூலைப் படித்து பயனடைய வேண்டுகின் றோம். அழகிய அச்சமைப்பில் வெளிவந்தி ருக்கின்ற இந்த நூல் XXVI+178 பக்கங்கள் கொண்டது. நூலின் விலை 225 ரூபா மட்டுமே.

இதே புத்தகம் பள்ளி மாணவர்களுக்கு ரூபா 125.00.

**"காந்தீயம்"** இப்பத்திரிகை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக இல:171, முதலாம் குறுக்குத்தெரு என்னும் முகவரியில் வசிக்கும் சங்கத்தலைவர் திரு.சோ.கா.தம்பிப்பிள்ளை அவர்களால் 2006 பங்குனி மாதம் கோண்டாவில் "அன்ரா பதிப்பகத்தில்" அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதழாசிரியர் : தி.உ.தயசூரியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org